III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.02/2012

Deposition of witness for the Defendant/DW2
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on **01-04-2026**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிலால் அகமது | Village | : |
| Father's / Husband's Name | : இக்பால் | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>5 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 5 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் என்னுடைய கையெழுத்து இருக்கின்றது. இந்த ஆவணத்தின் படி நான் ரூ.75 ஆயிரம் முன்பணமாக பெற்றேன். இதை தவிர வேறு பணபரிவர்த்தனை எதனையும் வாதி மனோவாவுடன் வைத்திருந்தேனா என்றால் பணபரிவர்த்தனை இருக்கின்றது. அந்த பரிவர்த்தனை தாவா சொத்து தொடர்பாக கிடையாது. அது தனிப்பட்ட முறையிலான பரிவர்த்தனை. நான் வாதியிடம் பெற்ற முன்பணம் ரூ.75 ஆயிரத்தை இந்த சொத்தை என்னால் விற்பனை செய்து தர முடியாது என்று ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ திரும்ப கொடுத்தேனா என்றால் அப்படி திரும்ப கொடுக்கவில்லை. 08.04.2011 அன்று கொன்னூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.371/2011ன் படி எனக்கு கொடுக்கப்பட்ட பவர் ரத்து செய்யப்பட்டதா என்றால் வலுகட்டாயப்படுத்தி துரைராஜால் ரத்து செய்யப்பட்டது. அதே நாளில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.372/2011 ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டிருக்கின்றேன் என்றால் துரைராஜ் வலுகட்டாயப்படுத்தி என்னை சாட்சி கையொப்பம் போடவைத்தார். என்னை இவ்வாறு வலுகட்டாயப்படுத்தினார் என்று போலிசில் நான் புகார் கொடுத்தேனா என்றால் போலிசில் புகார் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படுகின்ற பி.த.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள வரைவோலையின் ஒளிப்பட நகலில் சொல்லப்பட்டுள்ள தொகை ரூ.99,800/- பணத்தை நான் மனோவாவிடம் கொடுத்திருக்கிறேன். இது நிலத்திற்காக கொடுக்கப்பட்ட தொகை கிடையாது. நான் தனிப்பட்ட முறையில் வாங்கிய தொகைக்காக இதைை

திருப்பி கொடுத்தேன். பி.த.சா.ஆ.4 ஆவணத்தில் என்ன எழுதி இருக்கின்றது என்றால் சாட்சி அதில் கண்டுள்ள வாசகங்களை படித்து சொல்லி அதில் உள்ளது மனோவாவின் கையெழுத்தே கிடையாது என்றும் கூறுகின்றார். நான் வரைவோலை மூலமாக மனோவாவிற்கு கொடுத்த தொகை ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்காக தான் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் மனோவாவிடம் எவ்வளவு வாங்கினேன் என்றால் 3 ¼ லட்சம் ஒரு முறையும் 1 லட்சம் ஒரு முறையும் வாங்கியிருக்கின்றேன். அந்த 1 லட்ச ரூபாயை தான் DD ஆக கொடுத்தேன். மனோவாவிடம் நான் தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனை கேட்டு அவர் இதுவரை எனக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நான் மனோவாவிடம் தனிப்பட்ட முறையில் வாங்கிய பணத்தை திரும்ப பெற எனக்கு எதிராக வழக்கு எதுவும் தொடுக்கவில்லை. இந்த பணத்தை எந்த தேதிகளில் வாங்கினேன் என்றால் 2011 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் வாங்கினேன். சாட்சி தற்பொழுது மார்ச் மாதம் என்று கூறுகின்றார். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல் 4 ஆம் பிரதிவாதி என்னை கலந்து ஆலோசிக்காமலேயே அவரே வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்தி வந்தார் என்று கூறியிருக்கின்றேன் என்றால் சரிதான். வாதியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பத்தி 3 ல் கண்டுள்ள சங்கதிகளை சொல்லியிருக்கின்றேன் என்றால் அதனை நான் மறுக்கின்றேன். 08.04.2011 அன்று ஏற்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் 1 ஆம் பிரதிவாதி கிரிஸ்டிபெல் மற்றும் 2 ஆம் பிரதிவாதி ஜான் வெஸ்லி ஆகியோருக்கு துரைராஜ் முன்பணமாக ரூ.1 லட்சம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எந்த பணமும் கொடுக்கவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ICICI வங்கி காசோலை எண்.5587 மூலமாக ரூ.1 லட்சம் பணத்தை துரைராஜ், ஜான்வெஸ்லிக்கு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த சொத்து தொடர்பாக 1, 2 பிரதிவாதிகளுக்கும் 4 ஆம் பிரதிவாதி துரைராஜ்க்கும் இடையே பரிவர்த்தனை செய்யப்பட்ட காசோலை, வரைவோலை சம்மந்தமாக அசல் வழக்கு எண்.29/2013 ல் ஒரு இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியும்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**